REGAL (Jaffna)
Daily 5-15 & 7-15 p.m.
Sat. Sundays 10-30
James Coburn
in
HARD CONTRACT

தினசரி 2-00, இரவு 9-45
எம். ஜி. ஆர். - பானுமதி
பத்மினி
நடித்த
மதுரை வீரன்

MANOHARA
(Jaffna)
Daily 4 Shows
Catherine Denueve
in
BENJAMIN
(Strictly for adults only)
(Color)

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி மாலை 4-30
சனி ஞாயிறு 10-30
THE TRYGON FACTOR

தினசரி 6-30, இரவு 9-45
சனி, ஞாயிறு 2-30
நல்லவன் வாழ்வான்

வெல்லி சினிமா
(மாவிட்டபுரம்)
தினசரி 6-30, 10-00
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி - வாணிஸ்ரீ
நடித்த
தபால்காரன்
தங்கை

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். இரு வேடங்களில்
ஜெயலலிதா-அசோகன்
நடித்த
நீரும் நெருப்பும்

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — ஜெயலலிதா
முத்துராமன் - நாகேஷ்
நடித்த
சவாலே சமாளி

இப்பொழுது நடைபெறுகிறது!
வெலிங்டன் - லிடோ
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்





பத்மஸ்ரீ
★ சிவாஜி கணேசன்
★ பத்மினி
★ நாகேஷ் ★ தங்கவேலு
நடித்த
சிவாஜி புரடக்‌ஷன்ஸ்
வியட்நாம் வீடு


## வரி விளம்பரம்

மோட்டார் வாகனங்கள் மற்றும் சகலவிதமான யந்திரங்களுக்கும் உதிரிப்பாகங்கள் ஜேர்மனியில் பயிற்றப்பட்ட பொறியியலாளர்களின் மேற்பார்வையில் செய்துகொடுக்கப்படும். ராஜா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3846

### தவறிவிட்டது

புலோலி தெற்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த S 313148 தொடக்கம் 313152 வரையுமுள்ளதும் D 737895, J 069913 ஆகிய இலக்கம் கொண்ட கூப்பன் புத்தகங்கள் 14-1-72ல் பருத்தித்துறை, மரக்கறிச் சந்தைப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் புலோலி தெற்கு கிராம சேவையாளரிடம் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 3894

நேற்றுக் காலை கொடிகாமத்துக்கும் வரணிக்குமிடையில் காரின் மேலிருந்த ரக்சியாக் தவறிவிட்டது. பெறுமதியான பொருள்கள் அதனுள் இருப்பதால் தயவு செய்து அதைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாடு அலுவலகத்திலோ, ஆனந்த வ. சற்குணலிங்கம், கே. கே. எஸ். றோட், வல்வெட்டித்துறை என்ற முகவரியிலோ ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். 3895

### விற்பனைக்கு

ராதா பரியள ஆமணக்கெண்ணெ கூந்தலை நீளமாகவும், அடர்த்தியாகவும் வளரச் செய்யும். கண்களுக்குப் பிரகாசத்தையும், மூளைக்கு குளிர்ச்சியையும் கொடுக்கும். எஸ். சுப்பிரமணியம், கொம்பனி, 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 160, செட்டியார் தெரு, கொழும்பு. 3845


யாழ். தியேட்டர்
(காங்கேசன்துறை
தினசரி 6-15, இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30
எம்ஜிஆர்.-சரோஜாதேவி
எங்கவீட்டுப்பிள்ளை
(ஈஸ்ட்மன் கலர்)

நியூ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, இரவு 10-00
சனி ஞாயிறு 2-30
எஸ். எஸ் ஆர் - தேவிகா
நடித்த
மறக்க முடியுமா

சாந்தி
(சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
ஞாயிறு 2-30
ஜெமினி-கே ஆர் விஜயா
நடித்த
சங்கமம்


### விற்பனைக்கு

வட்டுக்கோட்டை அடைக்கலம்தோட்டம் சித்தசாமியார் கோவிலுக்கு அருகாமையில் உள்ள கள்ளி ஒழுங்கையில் 10 பரப்புக் காணி பனைகளுடன் வீடு கட்டக் கூடியகாணி விற்பனைக்குண்டு 494, காங்கேசன்துறை வீதி, அட்டாதெரு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தாருடன் ஞாயிற்றுக்கிழமையில் தொடர்புகொள்ளவும். 3893

### வைத்தியம்

ஆலோசனை இலவசம். மகப்பேற்றுத் அரைச் சவரம் Rs 150/- சிங்கப்பூர் மக்கள்துறைமிடம், A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம். மேல் மாடி ஆஸ்பத்திரி வீதி - பெரிய கடை, யாழ்ப்பாணம். 3869

வாதம், இரத்தி தொய்வு ஆகிய வியாதிகளை முற்றுக் குணப்படுத்து வதில் திறமை பெற்ற டாக்டர் எஸ். வல்லிபுரம் (D A M) தம்பரல்கரன் வைத்தியசாலை, இராசா வீதி நல்லூர் மார்க்கெட், யாழ்ப்பாணம் 3898

### கல்வி

ஆரம்ப வகுப்புகள், ஜி. சி. ஈ., அரசாங்க எழுதுவினைஞர்களுக்கான சகல பரீட்சைகளுக்கும் தபால் மூலம் சிங்களம் கற்பிக்கப்படும். வெற்றிவேல் போதனா நிலையம் (தபால் மூலம் கல்விப் பகுதி) கொக்குவில் மேற்கு, கொக்குவில். 3888

### தேவை

பாலர் பாடசாலை (Montessory)க்கு மொன்டிசோரி பயிற்சிபெற்ற ஆசிரியை தேவை. உடனடியாக கீழ்க் காணும் விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும். தராதரத்துக்கும் அனுபவத்திற்கும் ஏற்ப சம்பளம் நிர்ணயிக்கப்படும். கௌரவ காரியதரிசி, நெல்லியடி சன்மார்க்க சபை, கரவெட்டி. 3892

### வசியம்

வாழ்க்கையில் திட்டமிடும் காரியங்களை நிறைவேற்றுவதற்கு மட்டக்களப்பு மாந்திரிக வசியம் செய்து அனுப்பப்படும். பெயர் விபரங்களுடன் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம். ரகசியங்கள் வெளியிடப்படமாட்டாது. ஏ. எஸ். குட்டி, 57, சென்றல் ரோட், மட்டக்களப்பு. 3886

## சுன்னாகம் பட்டின சபை 1972 ஆட்டிறைச்சி 1ம், 2ம் கடை கேள்வி

1972ம் ஆண்டிற்கு சுன்னாகம் பட்டணத்தில் ஆட்டிறைச்சி விற்பனை செய்யும் உரிமைக்கான சீல் வைத்த கேள்விகள் 26-1-72 பிற்பகல் 2-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் 26-1-72 பிற்பகல் 2-00 மணிக்கு வழங்கப்படும். ஏனைய விபரங்கள் பட்டண சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொ. நாகலிங்கம்
தலைவர்,
பட்டண சபை
சுன்னாகம்.

பட்டண சபை
அலுவலகம்,
சுன்னாகம்.
17-1-72 3385

## நியமனம்

யாழ்ப்பாணம், புதன் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் கடமையாற்றிய திரு. ச. சு. செல்வரத்தினம் இம்மாதம் முதல் புங்குடுதீவு ஆங்கில மகாவித்தியாலயத்திற்கு அதிபராக நியமனம் பெற்றுள்ளார். இது மாதிரிப் பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் கடமையாற்றிய திரு. கே. திருநாவுக்கரசு இம் மாதம்முதல் கரம்பன் சண்முகநாத மகாவித்தியாலயத்திற்கு அதிபராக நியமனம் பெற்றுள்ளார்.

## "தொழிலாளர் திருநாள்"

பருத்தித்துறை, செவ். "உழைப்பாளி வர்க்கத்தின் உயர்திருநாள் தைப்பொங்கல் தமிழகத்தில் மட்டும் மன்றி உலகின் பல்வேறு பாகங்களிலும் சர்வதேசத் தொழிலாளி பாட்டாளி வர்க்கத்தினரும் கொண்டாடவேண்டிய திருநாள்" என்று பருத்தித்துறை ஆத்தியடி இளைஞர் முன்னேற்றக்கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற தைப்பொங்கல் விழாவிற்குத் தலைமை தாங்கிப்பேசிய பருத்தித்துறை நகரசபை உறுப்பினர் திரு. எஸ். முருகேசு குறிப்பிட்டார்.

தொடர்ந்து கலை, இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

நிகழும் விரோதிகிருது வருடம் தைமாதம் 7-ம் நாள் (21-1-72) வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கும் 10 மணிக்கும் இடையில் வரும் சுபமுகூர்த்தத்தில்,

| | |
|---|---|
| எமது புத்திரன் | எமது புதல்வி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| சு. வெற்றிவேலாயுதம் | அ. செல்வமலர் |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |
| [பரீட்சை திணைக்களம் கொழும்பு] | |

பொன்னாலை வரதராசப் பெருமான் கோயில் மண்டபத்தில் திருமணம் நடைபெறும். அத்தருணம் தங்கள் குடும்பத்தினருடன் வருகைதந்து மணமக்களை வாழ்த்திப்போகுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| திரு சுந்தரமூர்த்தியும் | செ. அப்பாத்துரையும் |
| குடும்பத்தினரும் | குடும்பத்தினரும் |
| (இளைப்பாறிய ஆசிரியர் மகாஜனக் கல்லூரி) | (நிர்வாக பொறியியலாளர் ஹிரியல) |
| இராமா வளவு, | தொல்புரம், |
| தெல்லிப்பழை. | சுழிபுரம் |

3381


வின்ஸர் — யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
★ எம். ஜி. ஆர். ★ ஜெயலலிதா
(இரு வேடங்களில்)
★ ராஜஸ்ரீ ★ நம்பியார்
★ நாகேஷ் ★ சுந்தரராஜன்
மற்றும் பலர் நடித்த
ஈஸ்ட்மன் வர்ணச் சித்திரம்
குடியிருந்த கோயில்
(புத்தம் புதிய கொப்பி)

# "போர் குற்றவாளிகளை விசாரிக்க பங்களாதேஷ் அரசுக்கு உரிமையுண்டு"

## ஐ. நா. பொதுச் செயலாளருக்கு இந்தியப் பிரதிநிதி கடிதம்

### ஜெனிவா கோட்பாட்டின் கீழ் இவர்களுக்குப் பாதுகாப்பு இல்லையாம்

நியூயோர்க் ஜன 18

கிழக்குப்பாகிஸ்தானில் போர்க்குற்றங்களும் பாதகச் செயல்களும் புரிந்த ராணுவத்தினர், அதிகாரிகள், மற்றும் பொதுமக்களைச் சேர்ந்தவர்கள் அனைவரும் விசாரணைக்குட்படுத்தப்படுவதை ஜெனிவா கோட்பாடு தடுக்கவில்லையென்று இந்தியா ஐ. நா. பொதுச்செயலாளரிடம் தெரிவித்திருக்கின்றது.

போர்க்கைதிகளுக்கு மாத்திரமே இந்த ஜெனிவா ஒப்பந்தம் பாதுகாப்பு அளிப்பதாகவும் குற்றச்செயல்களை புரிந்தவர்களுக்கு அது பாதுகாப்பு அளிக்கவில்லையென்றும் இந்திய நிரந்தரப்பிரதிநிதி ஐ நா பொதுச்செயலாளர் டாக்டர் குர்த்லாக் திவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

சண்டையின் போதும் சண்டை முடிந்தபின்னரும் பாகிஸ்தான் படைகள் ஜெனிவா ஒப்பந்த சரத்துக்களுக்கமைய நடந்துகொள்ளவில்லையென்று இந்தியா தெரிவித்திருப்பதாகத் தெரிகின்றது.

போர்க்குற்றங்களும் மக்களுக்கு எதிரான குற்றங்களும் புரிந்தவர்களை விசாரிப்பதற்கு பங்களாதேஷ் அரசுக்கு உரிமையுண்டு; பங்களாதேஷ் அரசின் வேண்டுகோளின்பேரிலேயே பாகிஸ்தான் போர்க்கைதிகள் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டனர் என்று இந்தியப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

இவர்கள் நியாயமான முறையில் விசாரிக்கப்படுவார்கள் என்று பங்களாதேஷ் அரசு அளித்துள்ள வாக்குறுதியையும் திரு சென் சுட்டிக்காட்டியிருக்கிறார். போர்க்கைதிகள் சம்பந்தமாக ஐ நா பொதுச்செயலாளர் எழுதியிருந்த கடிதங்களுக்குப் பதிலாக திரு சென் மேற்கண்டவாறு விளக்கம் கொடுத்திருப்பதாகத் தெரிகின்றது.

இந்தியாவிலுள்ள பாகிஸ்தான் கைதிகளைத் தமது பொறுப்பில் விடுமாறு கேட்க பங்களாதேஷிற்கு உரிமையுண்டு என்றும் திரு சென் சுட்டிக்காட்டியிருக்கிறாராம்.

கிழக்குப் பாகிஸ்தானில் இந்தியப்படைகளிடம் சரணடைந்த பாகிஸ்தான் ராணுவத்தினரை பங்களாதேஷிடம் இந்தியா ஒப்படைப்பதற்கு ஏற்கனவே பாகிஸ்தான் அரசு ஆட்சேபம் தெரிவித்திருப்பதாகத் தெரிகின்றது.

இந்திய — பாகிஸ்தான் போரின் கடைசிக் கட்டங்களில் டாக்காவிலிருந்த பாகிஸ்தான் படைகளை சரணடையும்படி இந்திய ராணுவத் தளபதி கோரிக்கை விடுத்தபொழுது சரணடைபவர்கள் ஜெனிவா ஒப்பந்தத்தின்கீழ் நடத்தப்படுவார்கள் என்று [illegible] தெரிவித்துவந்தார்.

## பிரிட்டிஷ் கடன்

புதுடில்லி ஜன 18

தமிழ்நாட்டில் தூத்துக்குடியில் அமோனியம் உற்பத்திசெய்யும் சாதனம் ஒன்றை நிறுவ பிரிட்டிஷ் அரசு இந்தியாவுக்கு 18 கோடி பவுன் கடன்வழங்கவிருக்கின்றது.

போர் ஓயும் தறுவாயில் பாகிஸ்தான் படைகள் குற்றங்கள் புரிந்தார்கள் என்று இப்போது சுட்டிக்காட்டப்படுகின்றது. போர்க்குற்றம் புரிபவர்கள் தண்டிக்கப்படுவதை ஜெனிவா ஒப்பந்தத்திலும் தடுக்கப்படவில்லையென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## வெள்ளை மாளிகையில் பலத்த பாதுகாப்பு

பாரத-பாகிஸ்தான் போரின்போது நிக்ஸன் நிர்வாகம் கடைபிடித்த கொள்கை சம்பந்தமான பல இரகசியத்தகவல்கள் வெளியானதைத் தொடர்ந்து வெள்ளை மாளிகையில் பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிபர் நிக்ஸன் பலப்படுத்தியிருக்கிறார்.

பாரத பாகிஸ்தான் போரின்போது இந்தியாவுக்கு எதிராக கடுமையான கொள்கை கொண்டு கடைப்பிடிக்க வேண்டும் என்று நிக்ஸன் நிர்வாகம் உத்தரவிட்டிருந்ததாகவும் பாகிஸ்தானை ஆதரித்ததாகவும் ஜெக் அன்டர்ஸன் என்பவர் அரசியல் தகவல்களை வெளியிட்டிருந்தார்.

வெள்ளை மாளிகையிலிருந்து இம்மாதிரியான இரகசியங்கள் வெளியாவதைத் தடுக்கும்படியாக பாதுகாப்பு ஏற்பாடுகளை நிக்ஸன் இப்பொழுது பலப்படுத்தியிருக்கிறார்.

## கொள்கை மோதல்?

திரு. ஜெக் அன்டர்ஸன் கடைசியாக வெளியிட்டுள்ள இரகசிய தகவலின்படி பாரத பாகிஸ்தான் போரின்போது அமெரிக்க வெளிஉறவு இலாகாவுக்கு வெள்ளை மாளிகை அதிகாரிகளுக்குமிடையில் கொள்கை மோதல் ஏற்பட்டதாகத் தெரிகின்றது.

பங்களாதேஷை அங்கீகரிக்கும்படி வெளிஉறவு இலாகாவினர் சிபாரிசு செய்தனர் என்றும் இதனை அதிபர் மாளிகை அதிகாரிகள் மறுத்துவிட்டதாகவும் ஜெக் அன்டர்ஸன் தகவல்கள் கூறுகின்றன.

நிபுணர்களின் ஆலோசனைகளின் பேரில் பங்களாதேஷை அங்கீகரிக்கும்படி வெளிஉறவு இலாகாவின் அதிபர் நிக்ஸனுக்கு சிபாரிசு செய்தார்கள் என்றும் அப்படி செய்யாவிடில் அமெரிக்காவுக்கு ராஜீய நிலையில் பெரும் வீழ்ச்சி ஏற்படலாம் என்றும் அவர்கள் தெரிவித்திருந்தனராம்.

### 36,5500 அகதிகள் தாயகம் திரும்பினர்

இந்தியாவில் குடியேறியிருந்த சுமார் 36,5500 வங்கதேச அகதிகள் இதுவரையில் தமது தாய்நாட்டுக்குத் திரும்பிச் சென்றுள்ளார்கள் என்று இந்திய அதிகாரிகள் அறிவித்துள்ளனர். அகதிகள் திரும்புவது இதேவேகத்தில் தொடர்ந்து நடக்குமானால் குறிப்பிட்ட காலத்துக்கு முன்னரே அகதிகள் அனைவரும் தாயகம் திரும்பிவிடுவார்கள் என்று அதிகாரிகள் எதிர்பார்க்கிறார்கள்.

### தி.மு.க.பாராட்டு

புதிய பங்களாதேஷ் அரசுக்கு தமிழ்நாடு திராவிட முன்னேற்றக்கழகம் பாராட்டு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானுடனான போரில் திறமையாக செயலாற்றி வெற்றிகண்டமைக்காக இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியையும் பாதுகாப்பு அமைச்சர் திரு ஜெகஜீவன்ராமையும் திராவிட முன்னேற்றக் கழகம் பாராட்டியுள்ளது. போரில் உயிர்த்தியாகம் செய்த வீரர்களுக்காக கழகம் அஞ்சலி செலுத்தியது.

## இந்தியாவிடம் பாக். பலத்த ஆட்சேபம்

போர் நிறுத்த ஏற்பாட்டை இந்திய படைகள் பல தடவைகளிலும் மீறியுள்ளதாக பாகிஸ்தான் இந்தியாவுடன் பலத்த ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

காஷ்மீர், சியால்கோட் ராஜஸ்தான் ஆகிய அரங்குகளில் இந்த போர் நிறுத்த மீறல்கள் நடைபெற்றிருப்பதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

கிழக்குப் பாகிஸ்தான் பல்கலைக்கழகங்களில் முன்பு படித்துக் கொண்டிருந்து நெருக்கடி காரணமாகப் படிப்பைக் கைவிட்ட பாகிஸ்தான் மாணவர்கள் பாகிஸ்தானிலுள்ள பல்கலைக் கழகங்களில் படிப்பதற்கு வசதிசெய்து கொடுக்கப்படும் என்று அந்த அரசு அறிவித்திருக்கிறது.

### எம்.எல்.ஏ. சுடப்பட்டார்

லாகூரில் பாகிஸ்தான் எம்.எல்.ஏ. ஒருவர் நேற்று துப்பாக்கியால் சுடப்பட்டு காயமுற்றதாக பாகிஸ்தான் வானொலி அறிவித்தது. சுட்டவர் யார் என்றோ, காரணம் எதுவென்றோ அந்த வானொலி தெரிவிக்கவில்லை.

### மீண்டும் சோவியத் யூனியன் உதவி

போரின்போது தடைப்பட்டிருந்த பொருளாதார உதவிகளை மீண்டும் பாகிஸ்தானுக்கு சோவியத் யூனியன் அனுப்பத்தொடங்கியிருப்பதாகச் செய்தியொன்று கூறுகின்றது.

### இடமாற்றம்

வேலணை, செவ்.

வேலணை அரசினர் மருத்துவ மனையில் மருத்துவத் தாயாகக் கடமையாற்றிய [illegible] புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

## உலக வலம்

### குழந்தைகள் வேண்டும்

வார்சோ-

இன்று உலகின்பலநாடுகளும் ஜனத்தொகைப் பெருக்கத்தைக் குறைக்க குடும்பத்திட்டம், குடும்ப நலக்குடும்பக்கட்டுப்பாடு எனப் பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயல்படுவதும் இவ்வேளையில் போலந்து ஜனத்தொகையை அதிகரிக்க நடவடிக்கைகளைப் பெருமளவில் மேற்கொள்ளுகிறது.

உலக யுத்தங்களுக்குப் பின்னர் உலகின் ஏனைய நாடுகள் போன்றே போலந்தின் ஜனத்தொகையும் அதிகரித்தது. அதிகரித்த ஜனத்தொகையைக் கட்டுப்படுத்தப் போலந்து எடுத்த நடவடிக்கைகள், பொருளாதாரச் சீர்கேடு போதிய வசிப்பிடமின்மையாவும் ஒன்றிணைந்து பிறப்பு விகிதத்தைப் பெரிதும் குறைத்துள்ளன. இதனால் படிப்படியாக போலந்தின் ஜனத்தொகை அரசுக்குப் பீதியளிக்கத்தக்க வகையில் வீழ்ச்சியடையத் தொடங்கியது. இந்த வீழ்ச்சியைத் தடுத்துப் பிறப்பு விகிதத்தை அதிகரிக்கப் போலந்தரசு தற்போது தீவிர நடவடிக்கைகள் மேற்கொண்டுவருகிறது.

0 0

### டாக்ஸியில் வசிக்கலாம்

-டோக்கியோ-

'ஜப்பான் தலைநகரான டோக்கியோவில் வசிப்பதிலும்பார்க்க டாக்ஸிகள் வசிப்பது செலவு குறைவானதாகும். இவ்வாறு கூறுகிறார்கள் டோக்கியோ நகரவாசிகள்.

இதற்குக் காரணம் உணவுப் பொருட்களின் விலை, வீடு வாடகை, நிலப் பரப்பின்மை, வீட்டைப் பற்றான செலவு ஆகியன உலகின் ஏனைய நகரங்களிலும் பார்க்க அதிகமாக இங்கு காணப்படுவதேயாகும். கார்கள், மற்றும் மின்பொருட்கள் முதலியவற்றை குறைந்தவிலையில் இங்கு பெற்றுக் கொள்ளலாம். ஆனால் உணவுப்பொருட்களை இவ்வளவு குறைந்தவிலையில் வாங்கிவிட முடியாது. டோக்கியோவில் வசிக்கும் ஒரு ஜப்பானிய குடும்பம் தனது வருவாயில் 25 வீதத்துக்கு அதிகமாக வீட்டு வாடகைக்குச் செலவிட வேண்டியுள்ளது எனவும் இதைவிட உணவுப் பொருட்களுக்கு செலவிடவேண்டியதே அதிலும் அதிகமாக இருப்பதாகவும் வீட்டில் வசிப்பதிலும் பார்க்க ஒரு டாக்ஸியில் வசிப்பது செலவுகுறைவானது என 'ஜப்பான்டைம்ஸ்' பத்திரிகை நிருபருக்கு டோக்கியோ வாசி ஒருவர் தெரிவித்துள்ளார்.

### பட்டதாரிகள் டாக்ஸி சாரதிகள்

— நியூயோர்க்

இன்றுபின்தங்கிய நாடுகளில் மட்டுமன்றி முதலாளித்துவ நாடுகள்எனக் கூறப்படுகின்ற கைத்தொழில் விஞ்ஞானத்துறைகளில் முன்னேறிப்பொருளாதாரத்துறையில் பெருமுன்னேற்றம் கண்டுள்ள அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளிலும் படித்தவர்களிடையே வேலையில்லாப் பிரச்னை பெரும் பிரச்னையாகவிருக்கிறது. அமெரிக்காவில் இன்று இது பெரும் சமூகப் பிரச்னையாக வளர்ந்து இளைஞர் குழப்பங்களுக்கும் அமைதியின்மைக்கும் வழிவகுத்துள்ளன.

அமெரிக்காவில் முன்பு வேலையில்லாது கஷ்டப்பட்டவர்கள் தொழில் நுட்ப, விஞ்ஞான அறிவற்றவர்கள் இதனால் அவர்களுக்கு வேலைவழங்குதல் கஷ்டமாகவிருந்தது. ஆனால் தற்போது இங்கு வேலையற்றிருப்பவர்கள் வேலைவழங்கக் கூடியவர்கள் அதாவது விவசாய விஞ்ஞான நிர்வாகத் துறைகளில் நன்கு தேர்ச்சிபெற்றவர்கள்.

பல்கலைக்கழகப்பட்டங்கள் பல பெற்றவர்கள் பலர் வேலைவாய்ப்பின்மையால் டாக்ஸி ஓட்டுகிறார்கள்.

### சுத்தத்திற்கு...

டோக்கியோ—

ஜப்பான் தனது சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருப்பதற்கு தேசிய வருவாயில் ஒரு வீதத்தைச் செலவிடுகிறது. நீர் காற்று ஆகியவற்றில் உள்ள நச்சுத்தன்மையை அகற்றவும் மேலும்நச்சுத்தன்மை அவற்றை அசுத்தப்படுத்தாது பாதுகாக்கவும் தேசியநிறுவனங்கள் பல தீவிரமாக உழைக்கின்றன.

நாட்டில் உள்ள பல முன்பொருள். இரசாயன பொருள்கள் உற்பத்தித்தாபனங்கள் காற்றுநீர் ஆகியவற்றைச் சுத்தப்படுத்தக்கூடிய பொருள்களை உற்பத்திசெய்கின்றன. இவ்வ பொருளாதார நிறுவனங்கள் பிரச்சார வேலைகளைச் செய்கின்றன.

தொழிற்சாலைகள், அணுஆயுத உற்பத்தி, அவற்றின் கழிவுகள் [illegible] காற்றுநீர் ஆகியன சமீபகாலத்தில் மிக அசுத்தப்படுத்தப்படுகின்றன.

# "எழுத்தாளர் 'கொலனியை' அரசு உருவாக்க வேண்டும்"

உடுப்பிட்டி, செவ்.

"கவிஞர்களுக்கு நிலம் வரிசாகக் கொடுக்கப்படுதல் வேண்டும். சாகித்திய மண்டலம் மூலம் அரசாங்கம் வழங்கும்பரிசு பாரம்பரியத்தைப் போற்றுவதுடன் கவிஞர்களின் தனிப்பட்ட வாழ்வை ஸ்திரமாக்கச்செய்யவும் பயன்படுதல்வேண்டும். சொந்தமாக கவிஞர்கள் வாழ்வில் சுகமெதையும் தராத கவிஞர்களில் பலர் காணிநிலமற்றவர்கள்"

இவ்வாறு 'செழுங்கமலச் சிலம்பொலி' என்னும் கவிதைத்தொகுதிக்கான சாகித்திய மண்டலப் பரிசுபெற்ற பண்டிதர் க. வீரகத்தி கரவெட்டி வாணி கலைக் கழகப் பழைய மாணவர்களால் அளிக்கப்பட்ட தேநீர் விருந்துபசாரத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினார்.

பண்டிதர் வீரகத்தி தொடர்ந்து பேசுகையில், 'கவிஞர்களுக்கு அளிக்கும் நிலமானியம் கவிதைப் பூங்காவாக மிளிருமென்பதில் ஐயமில்லை. நந்தினர்மன் ஒரு பூபாலன். அவன் காலத்தில் கவிஞர்களுக்கெல்லாம் நிலத்தையும் பணத்தையும் அள்ளிக்கொடுத்ததால் கவிஞர்களெல்லோருமே பூபாலர்களானார்கள்.

காணி நிலமற்ற எழுத்தாளர்களுக்கு அரசாங்கம் நிச்சயமாகக் காணி நிலம் கொடுத்திடல் வேண்டும் 'எழுத்தாளர் கொலனி' ஒன்றும் உருவாகவேண்டும் என்றார்.

அகில இலங்கைப் பண்டிதர் சங்கத்தலைவர் பண்டிதர் குக. வைரவனார் இவ்விருந்து வைபவத்திற்குத் தலைமைவகித்தார்.

# நாவலர் பணியில் தம்பிரான் சுவாமிகள்

## கலாச்சார அமைச்சர் பாராட்டு

சுன்னாகம், புதன்

இலங்கையிலேயே சமய சம்பந்தமான ஆதீனம் இது ஒன்று தான் இருக்கின்றது என்பதை அறியும் போதும் நாட்டில் முக்கியமாகப் பேணிப்பாதுகாக்க வேண்டிய சமய, கலாச்சாரம் முதலியவற்றை இந்த ஆதீனம் வளர்த்துவருகிறது என்பதை உணரும்போதும் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த ஆதீனம் மேலும் வளர்ச்சியடையவும், மண்டபங்களை அமைக்கவும் இந்த கலாச்சார பேரவையின் ஆலோசனை பெற்று நிதிஉதவி வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்வேன்"

இவ்வாறு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீதியாகராஜ சுவாமிகள் உற்சவத்தை ஆரம்பித்து வைத்துப்பேசுகையில் கலாச்சார அமைச்சர் திரு. எஸ். எஸ் குலதிலகா கூறினார்.

ஸ்ரீ லஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. குலதிலகா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

இந்த கலாச்சாரத்தைப் பேணிப்பாதுகாப்பதற்கென கலாச்சார அமைச்சு இந்த கலாச்சாரப் பேரவை ஒன்றை அமைத்துள்ளது. நல்லைதிருஞான சம்பந்தர் ஆதீன கர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள், இந்த சமயத்திற்கான பண்புகளையும், புனிதத் தன்மைகளையும், சமய அறிவுரைகளையும் வழங்கி மக்களை தழைப்படுத்துவதற்கு அயராது உழைக்கிறார் என்பதையிட்டு சந்தோஷமடைகிறேன். இந்த ஆதீனம் வளர்ச்சியடையவும் மண்டபங்களை அமைக்கவும் நிதி உதவி வழங்குவது சம்பந்தமாக இந்துகலாச்சார பேரவைக்கு சிபார்சுசெய்து நிதிஉதவி பெற்றுத்தர ஆவன செய்கிறேன்."

தபால்அமைச்சர் திரு செல்லையா குமாரசூரியர் பேசுகையில் கூறியதாவது:-

நாவலர் சைவத்தையும் தமிழையும் அழியவிடாது பேணிப் பாதுகாத்து வந்தார். இப்போது அவர் விட்டுச்சென்ற கடமைகளை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் நிறைவேற்றிவருகிறார் என்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம், நாவலர் பெருமான் சைவத்துக்கும் தமிழுக்கும் மாத்திரமல்ல, நிரராய், நாட்டின் விடுதலைக்கு அறப்போர் தொடுத்த முதல்வராய் விளங்கினார்.

"தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் கலாச்சார ரீதியில் நெருங்கிய தொடர்பிருக்கின்றது. இத்தொடர்பை எங்கள் அரசாங்கம் மேலும் வலுப்படுத்தி வருவது பாராட்டப்படவேண்டியது. இலங்கையின் இரு இனமக்கள் மத்தியில் இருக்கும் வேற்றுமைகள் அகல எமக்குத் தமிழ் சாத்த நாவலர் பெருமானுக்கு ஞாபகார்த்த முத்திரையை வெளியிட்டு எமது அரசாங்கம் கௌரவித்தது. இதுபோன்ற பல அம்சங்களில் எமது சமய கலாச்சார பாரம்பரியங்களுக்கு உதவும். அவற்றை வளர்க்கவும் அரசு தயாராய் இருக்கிறது. நல்லை ஆதீனம் நாவலரது பணியை தொடர்வதைக் காண நான் மகிழ்ச்சியடைகின்றேன்."

இவ்விழாவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை பேசுகையில் நல்லைஆதீனம் அமைந்துள்ள இடத்தின் ஒருபகுதி உரிமையாளரால் ஆதீனத்துக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது என்றும் ஆதீன முன்றலில் மண்டபம் ஒன்றை அமைப்பதற்கு கலாச்சார அமைச்சு உதவ வேண்டும் என்றும் கூறினார்.

ஆதீன சார்பில் கலாச்சார அமைச்சரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

......

## அவரை பயிரிட அரசு உதவி

கொழும்பு, செவ்வாய்

80 அல்லது 90 நாட்களுள் பயன்தரக் கூடியதாகிய அவரையைப் பெருமளவில் செய்கை பண்ணுவதற்கும் செய்கைபண்ணுவோருக்கும் பொருட்டு பண உதவியும் வழங்குவதற்கும் எண்ணெய் கொழுப்பு கூட்டுத்தாபனத்தின் ஆலோசனையின் பேரில் காணி விவசாய அமைச்சு முடிவுசெய்துள்ளது. கால்நடை உணவுகளைத் தயாரிக்கும் எண்ணெய் கொழுப்புக் கூட்டுத்தாபனம் அவரையையும் முக்கிய பொருளாக பயன்படுத்தும் எனத் தெரிகிறது. ஆபிரிக்கத் தீவு நாடுகளில் நிலவும் புரதத் பற்றாக்குறையை நீக்குவதற்கு அவரை சிறந்ததாக உள்ளது.

# இன்றைய பலன்

தை மாதம் 5-ந் திகதி

[19-1-72]

மேஷம்- அன்னியர்கள் மூலம் தொல்லைகள்தோன்றி மறையும். பணவிவகாரத்தில் அபிப்பிராயபேதங்கள் உருவாகும். மிகவும் சுமாரான தினம்.

ரிஷபம்- இன்று மாணவர்களுக்கு கல்வித்துறையில் நல்ல முன்னேற்றமுண்டு. பொதுத்துறைகளிலும் நாட்டம் ஏற்படும்,

மிதுனம்- நண்பர்களிடமிருந்து உற்சாகமான வரவேற்புக் கிடைக்கும். குடும்பத்திலும் பிணைப்புகள் ஏற்படும். சிறப்பான தினம்.

கடகம்- வெளியிடத்துப் பயணம் மேற்கொள்ளப்படலாம். உடல்நலத்தைப் பேணவும். இன்றுசுபதினம்.

சிம்மம்- இல்லத்தில் இனிமை மலரும் உறவினர்கள் கூடுவர். உல்லாசமான பொழுதுபோக்கும் உண்டு.

கன்னி- எண்ணியதில் தடைகள் தோன்றும். ஏமாற்றம் தாக்கும். நண்பர்களும் கால வாரிவிடக்கூடும். நிதானம் வேண்டும்.

துலாம்- தந்தை வழி ஆதரவு தவறாமல் கிடைக்கும் தடைகள் எல்லாம் தவிடுபொடி தனிக்கொடி பறக்கும்.

விருச்சிகம்- கடமையில் ஆர்வம் பிறக்கும். இதன் மூலம் புதிய பாதை திறக்கும். வெளியிடத் தொடர்புகளில் நல்ல திருப்பம் ஏற்படும்.

தனுசு: வரவில் உயர்வு காணும் வாழ்க்கையில் முன்னேற்றம் தென்படும். அவலங்களின் வாழ்த்தும் அவசியம் கிடைக்கும்.

மகரம்: துன்பத்தின் ரேகைகள் நிழலாட்டம் போடும். துணைவரின் உடல்நலம் கெடும். பணமும் பெருமளவில் செலவாகும்.

கும்பம்- அவசரப் புத்தியினால் விபரீதங்கள் விளையலாம்; கோபத்தை அடக்கின் நிலைமை சீர்பெறும்.

மீனம்- சிறப்பான சம்பவங்கள் இடம்பெறும். சிறுடன் வாழ்வீர். பெரிய இடத்துச் சிநேகிதம் அனுகூலங்களைக் கொண்டுவரும்.

சோதிட கலாநிதி
திருமலை ந. வேலுப்பிள்ளை

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

## (19-1-72) புதன்

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45 மாலை 6-00, இரவு 9-00)

294 மீ அலை 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 வாஷநற்சிந்தனை- நா. அருணாசலம், 6-25 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-50 பண்ணைச்செய்திகள் 7-05 திருப்பாடல், 7-20 குரல்வளை, 8-00இசைவேளை இராமமூர்த்தி வாணமிருஷ்ணன், 8-15 இஸ்லாமியகீதம்

மாலை 6-15 கிறிஸ்தவ நிகழ்ச்சி நடத்துபவர்: திருமதி மெடோஸ், 6-30 பாவடு சாந்தநாயகி சுப்பிரமணியம், 7-00 கண்ணகி காவியம், 7-15 திருக்குறள் அமுதம் புலவர் பாண்டியனார், 7-30 வெளிநாட்டுச் செய்திகள், 7-35 மெல்லிசைப் பாடல்கள்: பாடுபவர்கள்- மல்லிகாதேவி அரியரத்தினராசா, எம். கணேசன், 7-45 நாடகம் 'தணல்' எம் அஷ்ரவ்கான் எழுதியது தயாரிப்பு! கே எம் வாசகர், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி எஸ் சிதம்பரநாதன்

அத்துளு குடிநீர்த்திட்டம்

# "வேலைகள் பூர்த்தியாகியும் நீர்வழங்காதது ஏன்"

பருத்தித்துறை, செவ்.

"1948-ம் ஆண்டு பருத்தித்துறைத் தொகுதி எம். பி. யாக இருந்த திரு. தா. இராமலிங்கம் காலத்தில் நிதி ஒதுக்கப்பட்டு, 1957-ம் ஆண்டு திரு. பொன். கந்தையாவால் கூடுதலான பணம்ஒதுக்கப்பட்டு 1970ம் ஆண்டளவில் பூர்த்தி செய்யப்பட்ட அத்துளு குடிநீர்த்திட்ட வேலைகள் சகலதும் பூர்த்தியாக்கப்பட்ட பின்னரும் பொதுமக்களுக்குக் குடிநீர் வழங்கப்படாத காரணம் எமக்குப் புரியாத புதிராக உள்ளது."

இவ்வாறு கரவெட்டி மேற்கு கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கம் பிரதமருக்கும் உள்நாட்டமைச்சுக்கும் ஒரு மகஜரை அனுப்பியுள்ளது. இதை அரசியல் பிரச்னையாக நோக்காது மனிதாபிமானப் பிரச்னையாக அணுகுமாறும் மகஜர் கோரியுள்ளது.

# மலேச்சரிவில் இ. போ. ச. பஸ் பாய்ந்தது!

## 40 பேர் ஆஸ்பத்திரியில்

கொழும்பு, செவ்.

இ போ ச பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் 40 பிரயாணிகள் காயமுற்று இரத்தினபுரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இரத்தினபுரி குருவிற்ற வீதியில் இவ்விபத்து நிகழ்ந்தது. இ போ ச சாரதியான விஜயரத்னவும் இரு பிரயாணிகளும் ஆபத்தான நிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

விபத்து நடந்த இடத்துக்கு பொலிசார் விரைந்து சென்று விசாரணை நடத்தினர். மலேச்சரிவில் பஸ் பாய்ந்ததால் இவ்விபத்து ஏற்பட்டது என்று அறிவிக்கப்பட்டது. தொடர்ந்து பொலிசார் விசாரணைசெய்கின்றனர்

கடந்த சனிக்கிழமை கொழும்பு-காலிவீதியில் குடைக்கடுவாவென்னு மிடத்தில் கண்மையில் பஸ் ஒன்று லொறியுடன் மோதியதில் நான்கு பிரயாணிகள் காயமுற்று ஆபத்தான நிலையில் நாகொடை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர் (நா)

# "இனமத வேறுபாடின்றி ஒன்றுபட்டுச் செயலாற்றுவோம்"

## அளவெட்டியில் இரு உதவி அமைச்சர்கள் பேச்சு

மாவிட்டபுரம், செவ்.

"இன்றைய மக்கள் அரசு இனஐக்கியத்திலேயே முழுக்கவனமும் செலுத்திவருகிறது எமக்குள் இனத்திலோ மதத்திலோ வேறுபாடு இருக்கலாம். ஆனால் சமூக ஒற்றுமையைக் கருத்தில் கொண்டு சகலரும் ஐக்கியப்படவேண்டும்" என்று நீர்ப்பாசன நெடுஞ்சாலைகள் அமைப்பு உதவி அமைச்சர் திரு. சௌந்தசோமரத்தின அளவெட்டியில் அளிக்கப்பட்ட வரவேற்புக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அளவெட்டி சத்தியவிநாயகர் சனசமூக நிலையத்தினரால் இவ்வரவேற்பு அளிக்கப்பட்டது.

அளவெட்டி கிராமசபை சமாஜ மண்டபத்தில் ச. ச நி. தலைவர் திரு. வே. நாகராசா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கப்பல் போக்குவரத்து உல்லாசப் பிரயாண உதவி திரு. பீ. விக்கிரமசிங்கா பேசுகையில் கூறியதாவது:

"இச்சிறிய நாட்டில் வாழும் நாம் எமக்கிடையிலுள்ள அபிப்பிராய பேதங்களை மறந்து ஒரே குடும்பம் போல் நடக்கவேண்டும். நாட்டில்வாழும் பொதுமக்களின் உணவு, பொருளாதார விவசாய பிரச்னைகளுக்குத் தீர்வு காணவேண்டிய பெரும்பொறுப்புஇன்று மக்களிடம்தங்கியுள்ளது நாம்தமிழராயினுஞ் சரி சிங்களவரானாலும் சரி இருந்தாலும் ஒற்றுமையாக பொதுப் பிரச்னைகளைத் தீர்க்கமுயலாவிட்டால் அப்பிரச்னைகள் எம்மை நசித்துவிடும்.

வடபகுதியில் உள்ள மக்களின் முயற்சியால் விவசாயம், தொழில் வளர்ச்சியில் உயர்வுகாண முடிந்தது. இங்குள்ள மக்கள் நாட்டிற்குத் தேவையான பொருட்களை அளித்து பெரும் தொண்டாற்றி வருகின்றனர் இதேபோல மேலும் தொண்டாற்றி சகலரும் பொது பொருளாதாரத்தை சகோதர ரீதியில் வளர்க்க வேண்டும்.

கடந்த காலங்களில் தமிழ் மக்கள் மத்தியில் "சிங்கள மக்கள் தமிழ் மக்களுக்கு உரிமை வழங்கமாட்டார்கள். தமிழர்களை ஒதுக்குகிறார்கள்" என்ற எண்ணம் தலை தூக்கியிருந்தது. ஆனால் இன்று அந்நிலை நீங்கிவிட்டது'

......

## பிரியாவிடை

பருத்தித்துறை, செவ்.

கடந்த முப்பது ஆண்டுகளுக்குமேல் தெல்லிப்பழை மத்திய கல்லூரியில் சமையல்துறை மேற்பார்வையாளராகக் கடமையாற்றிய திரு. எஸ். வல்லிபுரம் இளைப்பாறியதைத் தொடர்ந்து அன்னாருக்கு வித்தியாலய ஆசிரியரும் மாணவரும் பிரியாவிடை அளித்தனர். அதிபர் திரு. க. சிவசிதம்பரம் வைபவத்திற்குத் தலைமை வகித்தார். திரு. சபா ஜெயராசா நன்றி தெரிவித்துப் பேசினார்.

......

## பன்னிருவரில் 10 ஆசிரியர் லீவில்

கோப்பாய், செவ்.

கடந்த வியாழக்கிழமை தலைகாமாவிலுள்ள பாடசாலை ஒன்றில் பத்து ஆசிரியர்கள் லீவில் நின்றபோது இரு ஆசிரியர்கள் மட்டும் அங்கு கடமையில் இருந்தனர்.

கல்வி அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி டாக்டர் பி. உடகம மேற்படி பாடசாலைக்கு அன்றைய தினம் திடீர் விஜயம் செய்தபோது பத்து ஆசிரியர்கள் ஒரே நாளில் லீவில் நின்றது தெரியவந்தது திரு. உடகம ஒரே நாளில் பத்து ஆசிரியர்களுக்கு லீவுபெற்றுக்கொள்ள அனுமதித்ததற்கான விளக்கத்தைத் தரும்படி மேற்படி பாடசாலையின் அதிபரைக் கேட்டுள்ளார்.

